JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.493/2024
PW.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சவரிமுத்து | தாலுகா | ஆலங்குளம் |
| தந்தை பெயர் | மரியலூயிஸ் | தொழில் | விவசாயம் |
| கிராமம் | குத்தபஞ்சான் | வயது | 42 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 19.05.2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது குத்தப்பஞ்சானில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. அசா.1 என் மனைவி. தேதி, மாதம் நினைவில் இல்லை. கடந்த 2018 ம் வருடம் என் வீட்டு பிரோவில் வைத்திருந்த 2 ஜோடி கம்மல்கள், ஒரு செயின் திருடு போயிருந்தது. அதன் மதிப்பு 32 கிராம் ஆகும். பின்னர் நான் நடவடிக்கை எடுக்க காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தோம். பின்னர் திருடு போன செயின்கள் திரும்ப கிடைத்து விட்டதாக தகவல் சொன்னார்கள். நான் இடைக்காலமாக மனு தாக்கல் செய்து அம்பாசமுத்திரம் நீதிமன்றத்தில் திரும்ப பெற்று கொண்டோம். நகைகள் யார் திருடினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.493/2024
PW.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பானுப்பிரியா | தாலுகா | ஆலங்குளம் |
| கணவர் பெயர் | சவரிமுத்து | தொழில் | கூலி வேலை |
| கிராமம் | குத்தபஞ்சான் | வயது | 39 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 19.05.2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.ஆஜரில்லை. அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது குத்தப்பஞ்சானில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. தேதி, மாதம் நினைவில் இல்லை. கடந்த 8 வருடங்களுக்கு முன்பு நான் என்னுடைய வீட்டில் மணிபர்ஸில் வைத்திருந்த 2 தங்க செயின்கள் திருடு போயிருந்தது. அதன் மதிப்பு 32 கிராம் ஆகும். பின்னர் நான் நடவடிக்கை எடுக்க காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன். என்னிடம் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் இருக்கும் கையொப்பம் என்னுடையது தான். மேற்படி புகார் மனு **அ.சா.ஆ.1** ஆக குறியீடுசெய்யப்படுகிறது. பின்னர் திருடு போன செயின்கள் திரும்ப கிடைத்து விட்டதாக தகவல் சொன்னார்கள். நான் இடைக்காலமாக மனு தாக்கல் செய்து திரும்ப பெற்று கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள தங்கசெயின்,இரண்டு ஜோடி கம்மல்கள், 6 மோதிரங்களை நான் திரும்ப பெற்று கொண்டேன். குடும்ப தேவைக்காக நான் நகைகளை அடகு வைத்துள்ளேன். மேற்படி புகைப்படம் அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நகைகள் யார் திருடினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi